


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்களின் மகன்கள் விஜயராகவன், ரவீந்திரன், கிருஷ்ண குமார், பேரன்கள் பொன்னப்ப பாரதி, பொன்னப்ப பிரகதீஷ், ராகவ் பொன்குமார் ஆகியோர் சந்தித்து, குமரிக் கோமேதனம் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்களின் நூற்றாண்டினையொட்டி அன்னாருக்கு நாகர்கோவில் நகரில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்தகுமார், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மனோ தங்கராஜ், ராஜேஷ் குமார், திருமதி தாரகை கத்பர்ட் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025-2026 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல்நாத், சிறப்பு செயலாளர் (சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்) அனுராக் மிஸ்ரா, சிறப்பு செயலாளர் (வனம்) தெ. ரிட்டோ சிரியாக், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் முனைவர் ஜெயந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நான் முதல்வன் திட்டத்தில் வெற்றிபெற்ற 50 மாணவர்கள் எனும் எண்ணிக்கை

# வருங்காலத்தில் 100 பேர்களாக வெற்றிபெற்று உயர வேண்டும்!

## போட்டித்தேர்வுப் பிரிவில் பங்கேற்று வெற்றிபெற்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஏப்.27-**

**அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களைப் பாராட்டி வாழ்த்திப் பேசினார். விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை நிகழ்த்தினார்.**

**அப்போது அவர், ஏழை - எளிய - நடுத்தர குடும்பத்துப் பிள்ளைகளின் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.ஆர்.எஸ். ஆகும் கனவை, 'நான் முதல்வன் திட்டம்' நனவாக்கியுள்ளதில் பெருமை கொள்கிறோம் என்று குறிப்பிட்டார்.**

நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

நம் முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான `நான் முதல்வன்' திட்டத்தின்கீழ், உதவித்தொகை பெற்றவர்கள் மற்றும் உறைவிடப் பயிற்சி மையத்தில் படித்து, யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றிபெற்றுள்ள தமிழ்நாட்டு மாணவர்களைப் பாராட்டுகின்ற சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### இடையில் தொய்வு

நம் முதலமைச்சர் அவர்கள், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இங்கே 50 முதல்வர்களை உருவாக்கி இருக்கிறார்கள். உங்களின் கனவை, நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு நிறைவேற்றி இருக்கிறது.

ஒரு காலத்தில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாட்டில் இருந்து மற்ற மாநிலங்களுக்குப் பயணம் செய்யும்போது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளாக நிறைய தமிழ்நாட்டு இளைஞர்கள் இருப்பார்கள். ஆனால், இடையில் அதில் கொஞ்சம் தொய்வு ஏற்பட்டது.

### தமிழ்நாடு நம்பர் - ஒன்

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், 2020-2021-ஆம் ஆண்டில் 27 பேர் மட்டுமே தமிழ்நாட்டில் இருந்து யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றிபெற்று இருந்தார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும், ஒன்றிய குடிமைப் பணிகள் தேர்வு என்றால், அதிலும் தமிழ்நாடு நம்பர்-ஒன் இடத்தில் இருக்க வேண்டும். இந்த இலட்சியத்துடன்தான் முதலமைச்சர் அவர்கள் `நான் முதல்வன்' போட்டித் தேர்வுகள் பிரிவைத் தொடங்க உத்தரவிட்டார்கள்.

இந்த சிறப்பான திட்டத்தைத் தொடங்கி வைக்கின்ற வாய்ப்பை, எனக்கு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதல்வன் போட்டித்தேர்வுப் பிரிவின் கீழ், வழங்கப்படுகின்ற ஊக்கத்தொகை என்பது



வெறும் நிதி உதவித்தொகைக் கிடையாது. ஒன்றிய அரசு குடிமைப்பணி எனும் உங்களின் கனவின் மீது வைத்து இருக்கின்ற முதலீடு. அதனால்தான் இன்றைக்கு தம்பி சிவச்சந்திரன், தங்கை மோனிகா போன்றவர்கள் அகில இந்திய அளவில் ரேங்க் எடுத்து, மிகப் பெரிய சாதனையைப் படைத்து இருக்கிறார்கள்.

### பணி செய்கின்ற விதம்

இன்றைக்கு நீங்கள் 50 பேர் வெற்றி பெற்று இருக்கிறீர்கள் என்றால், உங்களை பார்த்து இன்னும் 100, 200 பேர் உற்சாகத்துடன் யு.பி.எஸ்.சி. தேர்வை நோக்கி எழுத முன் வருவார்கள். இன்றைக்கு யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றிபெற்றுள்ள உங்கள் ஒவ்வொருவரின் பணியும் சிறக்க வேண்டும்.

நீங்கள் எல்லோரும் தமிழ்நாட்டில், தமிழ்நாட்டு மக்களுக்காகப் பணிபுரிய வேண்டும் என்பது எங்களின் ஆசை. நீங்கள் வெளிமாநிலங்களுக்குப் பணியாற்றப் போனாலும், நீங்கள் பணி செய்கின்ற விதம், நீங்கள் தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளீர்கள் என்று சொல்லும் அளவிற்குச் சிறப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த முறை நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவில் பயனடைந்துள்ள மாணவர்கள் 50 பேர் வெற்றிபெற்று இருக்கிறீர்கள். அதாவது இப்போதுதான் அரை சதம் அடித்துள்ளீர்கள். வருங்காலத்தில் நம் அரசின் ஒரே ஆசை தமிழ்நாட்டு மாணவர்கள் முழு சதம் அடிக்க வேண்டும். குறைந்தது 100 பேராவது வெற்றிபெற வேண்டும். அதற்கு இளைஞர்களுக்கு துணை நிற்க நம் அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

### வருக வருக

இந்த பாராட்டு விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்களையும், தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், மதிப்பிற்குரிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பயிற்சித்துறைத் தலைவர் விக்ரம் கபூர் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், மனிதவள மேலாண்மைத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் பிரகாஷ் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், சிறப்புத் திட்ட இயக்குநர் சுதாகரன் ஐ.ஆர்.பி.எஸ்., அவர்களையும், வருக, வருக என வரவேற்கிறேன்.

இந்த நேரத்தில் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை, நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு உள்ளிட்டவற்றின் அதிகாரிகள், பயிற்சியாளர்களையும், வெற்றிபெற்ற மாணவர்களின் பெற்றோர்களையும், உறவினர்களையும், பத்திரிகை நண்பர்களையும் வருக, வருக என வரவேற்று, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

## அம்பத்தூரில் மகளிர் பங்கேற்கும் மாபெரும் விளையாட்டுப் போட்டி!

### ஹெலன் டேவிட்சன் பரிசுகள் வழங்குகிறார்! உஷா நாகராஜ் எம்.சி. தலைமை!

*சென்னை, ஏப். 27 -*

*83 - வது வார்டு மாமன்ற உறுப்பினர் உஷா நாகராஜ் தலைமையில் மாபெரும் விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறுகிறது. இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர் பி.கே.சேகர்பாபு - மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டெவின் உள்ளிட்ட முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*சென்னை கிழக்கு மாவட்டம் - அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2025 நிகழ்ச்சியில் மகளிர் பங்கேற்கும் மாபெரும் விளையாட்டுப் போட்டி இன்று (27.4.2025 -ஞாயிறு) காலை 10 மணிக்கு கடப்பா ரோடு, டாக்டர் அம்பேத்கர் கால் பந்து விளையாட்டு மைதானம், மதானகுப்பத்தில் நடைபெறுகிறது. 83வது வார்டு மாமன்ற உறுப்பினர்*

*வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர் உஷா நாகராஜ் தலைமை தாங்குகிறார்.*

*கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு , சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மேலும் மேயர் பிரியா ராஜன், ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., சன்.முனியாண்டி, பி.கே.மூர்த்தி எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.இராஜகோபால் , புனிதவதி எத்திராசன் எம்.சி., சரிதாமகேஷ்குமார் எம்.சி. வி.ரமேஷ்(எ)நீலகண்டன் எம்.சி., எல்.பி.எஃப். மோகன், டாக்டர் .ஜி.சாந்த குமாரி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி., சுதா தீனதயாளன் எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., ஜெ.பாலமுருகன்,*

*ஜி.வி.நாகவள்ளி, கு. கிருஷ்ணமூர்த்தி, து.ஆபிரம், அம்பத்தூர் கிழக்குப் பகுதி கழக நிர்வாகிகள் து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழி யன், ரா.லட்சுமிரங்கசாமி, சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், மேனாம்பேடு இ.ராமு மு.விஜயகுமார், த.வ.லால்,, மாவட்ட பிரதிநிதிகள் கே. செல்வம், கோ.முத்துகுமார சாமி, கோ.ராஜ்குமார் , ந.குமரவடிவேல், ச.கோதண்டன், கோ.இன்பசேகரன், இ.நடராஜன், ஆர். விமலன், ஜெ.ஐயப்பன் எஸ். பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்கே. பொற்கொடி, எம்.கமல், எம்.இ.சேகர், எஸ்.உமா ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*மகளிர் பங்குபெறும் விளையாட்டு போட்டியை மாநில மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் துவக்கி வைத்து, பரிசுகள் வழங்குகிறார்.*

*மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், ஜி.மகாதேவன், இசட் ஆசாத், மண்டலக் குழுத் தலைவர்கள் கூ.பி.ஜெயின், ஸ்ரீராமுலு, சொ.வேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்னர்.*

*83 அ.வட்ட செயலாளர் சு.மோகன்குமார், 83வது வட்ட செயலாளர் சீ.லோகநாதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.4.2025) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில் கோயம்புத்தூரில் நடைபெற உள்ள ”உலக புத்தொழில் மாநாடு 2025க்கான இலச்சினையை வெளியிட்டு, மாநாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்பு இணையதளத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் தலைமை செயல் அலுவலர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.வி. செம்மொழி தலைமை!

## வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் 250 ஓவியர்கள் - புகைப்படக் கலைஞர்களுக்கு நலஉதவிகள்!

### பூச்சி எஸ்.முருகன் வழங்கினார்!

*சென்னை, ஏப்.27-*

*சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் கழக தலைவர் 72 வது பிறந்தநாள் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் நலத்திட்டம் - தலைமை நிலைய செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் திரு. பூச்சி முருகன் அவர்கள் 250ஓவியர்கள், மற்றும் புகைப் பட கலைஞர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 65, காலத்தை கலையால் பதிவு செய்! கழகத்தை உயிராய் உறுதி செய்!! எனும் தலைப்பில் வில்லிவாக்கம் மேற்கு பகுதியில், மாபெரும் நலத்திட்டம் 26.04.2025 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, அண்ணா நகர் மேற்கு, பள்ளிசாலை பி.எஸ். பி.ஹாலில் நடைபெற்றது.*

*இந்நலத்திட்ட விழாவில், தலைமை பொதுக்குழு உறுப்பினர், 104வது வார்டு மாமன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின் எம்.சி, வே.வாசு, சாவித்திரிவீரராகவன், சுதாதீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், ஆர்.வரதன், லதாவாசு எம்.சி, ஜி.ஜெ.பிரபு, ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம. கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு. சுரேஷ்பாபு, சொ.முருகேசன், ப.லோகுபாபு, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா. ஜனனி முன்னிலை வகித்தனர்.*

*எஸ்.கே.பி.தீபக்குமார், ஆ சக்திவேல், பூ.சத்தியேந்திரன், ஆர். கேபாலகிருஷ்ணன், சிட்கோ.ப.சுரேஷ்பாபு, ம.சந்தர்எபி, கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், க.மணிமாறன், எச்.பிரபாகரன், டி.எம்.பாஸ்கரன், பி.சசி பிரகாஷ், மு.ரவிச்சந்திரன், ஜெ.பாலசுந்தரம், ஏ.எஸ்.கண்ணன், பா.தமிழ்செல்வன், சே. ராஜாஜி, சி.பத்மநாபன் ஆகியோர் வரவேற்றனர்.*

*இந்நலத்திட்ட விழாவில் தலைமை நிலைய செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைவர் திரு.பூச்சி முருகன் அவர்கள் 250 ஓவியர்கள் மற்றும், புகைப்பட கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.*

*மேலும், இந்நலத்திட்ட விழாவில்,, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் புரசை டி.சம்பத் டி.தாமோதரன் டபள்யூ.அமுல் நா.அறிவுடைநம்பி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எ.வேதா விக்னேஷ் சீனிவாசன் ச.மனோகரன் கே. பாஸ்கர் சி.தேவராஜ் காஞ்சி. செ.துரை வில்லி வாக்கம் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் வி.சபாபதி வ.ரமேஷ் பாபு மு.பரமானந்தம் டி. ஸ்டாலின் ந.குமார்*

*எ.சத்தியநாராயணன் கி.ஜெய்சங்கர் ப. செந்தில்குமார் எஸ்.துரைபாபு கே.ராஜா வி.ஆர்.ஜெயக்குமார், மாவட்ட பிற அணி இணை துணை அமைப்பாளர்கள் எஸ். எஸ்.மணிகண்டன் ப.மலர்கொடி சிட்கோ.எஸ்.அன்வர்தீன் சாந்திபில்லி ஜி.கே.வெங்கட் வழக்கறிஞர் பி.கோபிலதா வழக்கறிஞர் ஜெ.சரவணன் வழக்கறிஞர் மா.முரளி வினோத் ஒசோன்மனோகரன்*



*பொறியாளார் எம்.எஸ். ரமேஷ் டாக்டர்.எம்.ஜி.திவ்யானந்தன் ஸ்டண்டு வி.புஷ்பராஜ் ஜிம்.முரளி[எ]சையத் டி.பாஸ்கரன் ச.காளிதாசன் சிட்கோ த.விஜயகுமார் கே. தங்கவேல்ராஜன் டி.சையத்நிய மத்துல்லா செங்கைசண்முகம் ஆ.சுரேஷ்குமார் வழக்கறிஞர் எம்.குணசேகரன் என்.எஸ். விஜயகுமார் வழக்கறிஞர்கே. சுப்பிரமணி பி.ஜெயந்தி உ.பிரசன்னவேலன் வழக்கறிஞர் பா.சுந்தர் கா.யுவராணி கே.ஜி. அய்யாதுரை ஆர்.ராஜசேகர் ஜிம்.என்.மோகன்குமார் வி. ராஜமாணிக்கம் ஓம்.புரசை சேகர் சா.அருண்குமார் ராபர்ட் ராஜன் எம்.விஜயகுமார் க.பிரகதீஸ்வர் கே.பி.சரவணன், வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி அமைப்பாளர்கள் வெ.மகேந்திரன்*

*அனுசுயாபாண்டுரங்கன் கே.கிருஷ்ணவேணி வெ.ராஜேஷ் டி.ஜானகிராமன் எஸ்.வெற்றிவேல் சன்.இரவி எஸ்.பழனிவேல் எம்.செந்தில் குமார் எ.விஜய் ச.சித்ரா சு. இன்பநாதன் ம.ஜெகதீஸ்வரன் பிரேமாதயாளன் ஆர்.இருதய மேரி*

*வழக்கறிஞர்ஜி.அய்யனார் ஆர்.மோகன்ராஜ் டி.எச்.செல்வராஜ் எஸ்.ஸ்ரீகாந்தன் டாக்டர்.எஸ்.கே.ராஜேந்திரன் எம். சக்திவேல் ரா.கமேஷ்வரன் ஆர்.கற்பகம், 94ஆ வட்ட நிர்வாகிகள் கோ.வி.சண்முகம் மோ.கார்த்திக் கரிவேப்பிலை. ஆர்.செல்வம் இசைமணி எபிநேசர் ப.மகேஷ்வரன் வெ. ரமேஷ்பாபு பி.ஜெ.நாகராஜ் எஸ்.ஆர்.மூர்த்தி ஆதிகுமார் தே.பிரபாகரன் ஆகியோர் சிறப்பித்தனர்.*

*இப்புகழரங்கத்தில் வட்ட கழக செயலாளர் கே.எஸ். பாபு, சு.பாண்டிதுரை நன்றி கூறுகிறார்கள்.*